www.padippkam.com

## தநாமாலெகவின் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | கட்சித் தீர்மானம் | ரூ. 15.00 |
| 2. | கட்சித் திட்டம் | ரூ. 20.00 |
| 3. | சமுதாயத்தின் அடிப்படை மற்றும் முதன்மை முரண்பாடுகள் | ரூ. 20.00 |
| 4. | தவறுகளுக்கு தத்துவார்த்த மூலாம் | ரூ. 25.00 |
| 5. | இருபெரும் புரட்சிகளின் மாபெரும் படிப்பினைகள் | ரூ. 20.00 |
| 6. | பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை | ரூ. 30.00 |
| 7. | இந்தியாவில் தேசியப் பிரச்சினையும் சனநாயகப் புரட்சியும் | ரூ. 30.00 |
| 8. | திட்டம், மூலவுத்தி, செயலுத்தி என்றால் என்ன? | ரூ. 25.00 |
| 9. | முதலாளித்துவப் பாராளுமன்றமும் கம்யூனிஸ்டு புரட்சியாளர்களும் | ரூ. 30.00 |
| 10. | திரிபுவாதத்திற்கு எதிராக | ரூ. 40.00 |
| 11. | பெரியார் தத்துவம் ஒரு மார்க்சிய விமர்சனம் | ரூ. 25.00 |
| 12. | மார்க்சியம் வெல்லும் | ரூ. 15.00 |

# உடனடி வேலைத் திட்டம்

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippakam.com

# உடனடி வேலைத் திட்டம்



**தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி**

படிப்பகம்

www.padippkam.com

விலை ரூ. 3

# உடனடி வேலைத் திட்டம்

தமிழகம் இப்போது குடிநாயகப் புரட்சிக் கட்டத்தில் இருக்கிறது. வல்லரசியம். இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியம். நிலக்கிழாரியம் ஆகியவற்றை முற்றாகத் தூக்கி எறிவதன் மூலமே இப்புரட்சிக் கட்டத்தை நிறைவேற்ற முடியும். பாட்டாளி வகுப்புத் தலைமையிலான இப்புரட்சி உழவர் புரட்சியைச் சாரமாகக் கொண்ட புதிய குடிநாயகப் புரட்சியை உள்ளடக்கிய தேசிய விடுதலைப் புரட்சி மூலம் நிறைவேற்றப்படும்.

தேசிய விடுதலைப் புரட்சி மூலம் இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஒரு முழுமையான இறையாண்மை கொண்ட தேசிய அரசை-புதிய குடிநாயக அரசைத் தமிழகத்தில் அமைத்த பின்னர் அது இடையீடின்றி சோசலிசத்திற்கும் பின்னர் பொதுவுடைமைக்கும் முன்னேறும். இதற்கு தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியானது மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனை ஒளியில் தெளிவுணர்வுடன் வழிகாட்டும். தமிழக, உலக நாடுகளின் கடந்தகால நிகழ்கால புரட்சிப் படிப்பினைகளைக் கற்றுக் கட்சியானது தமிழகப் புரட்சியின் வெற்றிக்கு உகந்த வழியில் அவற்றை ஒருங்கிணைக்கும்.

புரட்சியின் தலைமை. பாட்டாளி வகுப்பு. முகமையான ஆற்றல் பெரிதும். தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட மக்களாய் இருக்கும் உழவர்கள். கட்சி. நிலமற்ற. கூலி. ஏழை உழவர்களுடன் முழுமையாகவும். உறுதியாகவும் சார்ந்து நின்று நடுத்தர உழவர்களுடன் இணைந்து நிற்கும். ஒரு சிறு பகுதியினரைத் தவிர்த்த ஒரு பகுதி பணக்கார உழவர்களை வென்றெடுக்கும்; மற்றொரு பகுதியை நடுநிலைப்படுத்தும். நகர்ப்புறக் குட்டிமுதலாளிய வகுப்பும். புரட்சிகர அறிவாளிகளும் உறுதியான நட்பு ஆற்றல்கள். தேசிய முதலாளிகளும். முதலாளிய அறிவாளிகளும் ஊசலாடும் நட்பு ஆற்றல்கள்.

தேசிய விடுதலைப் புரட்சியை நிறைவேற்ற பாட்டாளி வகுப்புத் தலைமையிலான தொழிலாளர்-உழவர் கூட்டை அடிப்படையாகக் கொண்ட அனைத்துத் தேசிய. குடிநாயக ஆற்றல்களையும் உள்ளடக்கிய ஒரு புரட்சித் தேசிய விடுதலை முன்னணியைக் கட்சி கட்டும். தேசிய விடுதலை முன்னணி புரட்சியின் தொடக்கத்திலிருந்தே *புரட்சித் தேசிய அரசு* என்ற

படிப்பகம்

www.padippkam.com



முழக்கத்துடன் கட்டப்படுகின்ற தேசிய இயக்கத்திலிருந்து புரட்சிப் போராட்டங்களினூடே படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும்.

புரட்சியின் வெற்றிக்கு அரசியல் போராட்டத்தின் பங்கு முதன்மையானதும் முகமையானதும் ஆகும். அதே நேரத்தில் படைக்கலப் போராட்டத்தின் பங்கு முகமையானதும் தீர்மானமானதும் ஆகும். அரசியல் அணிதிரட்டலுக்கான அரசியல் போராட்டம் அதிகாரத்துக்கானப் போராட்டமாக வளர்ச்சியடையும் போது படைக்கலப் போராட்டம் தொடங்கும். அது அரசியல் போராட்டத்தின் கூடவே கொரில்லாப் பகுதியை அமைப்பது, செந்தளப் பகுதியை அமைப்பது, நாட்டின் அரசியல் அதிகாரம் முழுவதையும் கைப்பற்றி தேசத்தை விடுவித்து மக்கள் குடிநாயக அரசை நிறுவுவது என்ற முறையில் புரட்சிப்போர் தேசிய விடுதலைப் புரட்சியில் வெற்றி பெறும் வரையில் முன்னேறும். புரட்சியின் பாதை எண்ணற்ற ஏற்ற இறக்கங்களும், முன்னேற்றம் பின்னடைவுகளும், நெளிவு-சுளிவுகளும் கொண்டதாகவே இருக்கும்.

இவ்வாறு கட்சித் திட்டம், புரட்சியின் கட்டம், அதன் தன்மை, மூலவுத்தியின் திசை, வழி மற்றும் அரசியல் ஆற்றல்களின் அணிவகுப்பு ஆகியவை பற்றிய தெளிவான வரைபடத்தை வழங்கி இருப்பதுடன், புரட்சியில் அரசியல், படைக்கலப் போராட்டங்களின் பங்கு குறித்தும் கோடிட்டுக் காட்டி இருக்கிறது. இவற்றின் அடிப்படையில் கட்சி, புரட்சி இயக்கத்தின் ஒவ்வொரு செயலுத்திக் கட்டத்திலும் சரியான வேலைத் திட்டம் வகுத்து செயல்படுவதன் மூலம் புரட்சி இயக்கத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும். இப்போது நம்முன் உள்ள கேள்வி இப்போதைய செயலுத்தி கட்டமும் அதற்கான வேலைத்திட்டமும் என்ன என்பதேயாகும்.

## அரசியல் அணிதிரட்டலே இன்றைய செயலுத்திக் கட்டம்

தமிழகத்தை விடுவிக்கும் தேசிய விடுதலைப் புரட்சியின் வெற்றிக்கு அரசியல் போராட்டமும் படைக்கலப் போராட்டமும் ஒன்றுக்கொன்று குறையாத முகமையுடையவையாகும் எனினும் புரட்சியின் தொடக்கத்திலிருந்து அரசியல் போராட்டம் நிகழ்ச்சி நிரலில் இருப்பது போல படைக்கலப் போராட்டம் இருக்காது. ஏனெனில் அரசியல் போராட்டம் அரசியல் அணிதிரட்டலுக்கான கட்டத்திலிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கட்டத்திற்கு வளர்ச்சியடையும் போதுதான் படை அமைப்புகள் கட்டப்பட்டு படைக்கலப் போராட்டம் தொடங்கப்படும். அவ்வாறின்றி அரசியல் போராட்டங்கள் அரசியல் அணிதிரட்டலுக்கான கட்டத்தில் நீடிக்கும் போதே படை அமைப்புகளைக் கட்டுவதும், படைக்கலப் போராட்டம் தொடுப்பதும், மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும் படையியமாகவும் தீவிரவியமாகவும் அமைந்து புரட்சிக்கு கேடு விளைவிப்பதாகவே இருக்கும். தமிழ்நாடு விடுதலைப் புரட்சி என்பது இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்களின் அதிகாரத்திலிருந்து தமிழகத்தினை விடுவித்துக் தமிழ் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். இதற்கு மக்கள் திரட்டப்பட்டு உடனடி அணிய நிலையில் இருந்தால் அரசியல் போராட்டத்துடன் இப்போதிருந்தே படைக்கலப் போராட்டத்தை தொடங்க முடியும். இதனால் புரட்சியின் வெற்றிக்குரிய காலம் மேலும் விரைவுறலாம். ஆனால், இன்று அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டத்திற்கு மக்கள் திரட்டப்பட்டு உடனடி அணிய நிலையில் இல்லை. இது வியப்புக்குரியதன்று. இதுவரை தேசிய விடுதலைப் புரட்சி அரசியலை முன்வைத்து தொடர்ந்த அரசியல் போராட்டங்கள் மூலம் அரசியல் அணிதிரட்டலுக்கான நடவடிக்கைகளை எந்தக் கட்சியும் மேற்கொண்டிருக்காதபோது இது இயல்பானதே. இந்நிலையில் தமிழ்நாடு விடுதலைப் புரட்சித் தீர்மானத்தை மேற்கொண்டிருக்கும் நமது கட்சி புரட்சியின் வெற்றியை உறுதிப்படுத்த முதற்கட்டமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்திற்கு மக்களை அணியப்படுத்துவதையே அதாவது அரசியல் அணிதிரட்டலையே தனது உடனடிக் கடமையாக எதிர்கொண்டிருக்கிறது. எனவே இன்றைய செயலுத்திக் கட்டம் அரசியல் அணிதிரட்டலுக்கான கட்டமாகும். இக்கட்டத்தில் அக்கம் பக்கமாகவோ தொடக்கத்திலிருந்தோ படைக்கலப் போராட்டம் நிகழ்ச்சி நிரலில் இருக்கும் என்பது போன்ற சிந்தனைப் போக்குகள் அரசியல் அணிதிரட்டலுக்கே தடையாகிவிடக்கூடிய இடது பொழுதமைவிய சிந்தனைப் போக்குகளாகும்.



## தேசிய இயக்கத்தைக் கட்டுவதே இன்றைய வேலைத் திட்டம்

அரசியல் அணிதிரட்டல் என்பது திட்டமிட்ட பல்வேறு அரசியல் இயக்கங்கள் போராட்டங்கள் மூலமாக அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்திற்கு மக்களை அணியப்படுத்துவதாகும். இதை எவ்வாறு செய்வது? இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்களிடமிருந்து தமிழகத்தை விடுவித்து பாட்டாளிய வகுப்புத் தலைமையில் மக்கள் அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கான இயக்கமே தேசிய விடுதலை முன்னணி. இந்த முன்னணி *புரட்சித் தேசிய அரசு* என்ற முழக்கத்துடன்

படிப்பகம்

www.padippkam.com



தொடக்கத்திலிருந்தே கட்டப்படும் தேசிய இயக்கத்திலிருந்து புரட்சிப் போராட்டங்களினூடே படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும் என்று கட்சித் திட்டம் குறிப்பிடுகிறது. அதாவது தேசிய விடுதலை முன்னணி என்பது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் மக்கள் போராட்டத்திற்கான இயக்கம் எனின், தேசிய அரசு எனும் முழக்கத்துடன் கட்டப்படுகின்ற தேசிய இயக்கம் மக்களை அரசியல் அதிகாரத்திற்கு அணிதிரட்டுவதற்கான இயக்கமாகும். இன்று தமிழ் மக்களுக்குச் சொந்தமான தேசிய அரசு இல்லை. அவர்களுக்கு இருப்பதெல்லாம் அவர்களை அடக்கி ஒடுக்கி மேலாண்மை செலுத்துவதற்கான இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய அரசும் அதன் கைக்கூலியாகச் செயல்படும் பொம்மையரசிலும் கேடான 'மாநில' அரசுமேயாகும். ஆனால், தமிழ் மக்கள் தமது சொந்த அரசியல், பொருளியல், பண்பாட்டியல் தேவைகளை நிறைவு செய்துகொள்ள அவர்களுக்கு முதலில் தேவைப்படுவது அவர்களுடைய சொந்த *புரட்சித் தேசிய அரசே*யாகும். இத்தகைய விழிப்புணர்வு இன்றி தமிழ் மக்கள் தமிழ்நாட்டு விடுதலைப் புரட்சிக்கு-அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டத்திற்கு அணியமாக முடியாது.

எனவே, தமிழ் மக்களின் உடனடி பல்வேறு தேசியக் கோரிக்கைகளுக்கான அரசியல் இயக்கங்களைத் தொடர்ந்து தெளிவுணர்வுடன் கட்டமைத்து அவற்றோடு இணைந்த வடிவில் புரட்சித் தேசிய அரசின் தேவை குறித்த விழிப்புணர்வை மக்கள் நடுவில் ஏற்படுத்த வேண்டும். இதுவே தேசிய விடுதலைப் புரட்சிக்கான அரசியல் அணி திரட்டலும் தேசிய இயக்கமும் ஆகும்.

இத்தகைய அரசியல் அணிதிரட்டலில் இரண்டு கூறுகள் உள்ளன. முதலாவது:- *புரட்சித் தேசிய அரசு* என்ற முழக்கம். இது முழுமையான இறையாண்மை கொண்ட மக்கள் குடிநாயக அரசைக் குறிப்பதாகும். இரண்டாவது:- மக்களின் உடனடி தேசியக் கோரிக்கைகளும் அவற்றுக்கான அரசியல் இயக்கங்களும் ஆகும். இன்றைய உடனடி தேசியக் கோரிக்கைகளாக இருப்பவை எவை? அவற்றை நாம் பின்வருமாறு தொகுக்கலாம்.

## உடனடி தேசியக் கோரிக்கைகள்

1. கல்வி, ஆட்சி, ஞாயம், வழிபாடு ஆகிய அனைத்துத் துறைகளிலும் அனைத்து மட்டங்களிலும் தமிழ்மொழி மட்டுமே விளங்கச் செய்யவும்; ஆங்கிலம், இந்தி, சமக்கிருதம் மற்றும் பிற மொழிகளின் மேலாண்மையை ஒழிக்கவும் போராடுவது.



2. தமிழகத்திற்குத் தனிக்குடியுரிமை பெறவும், அயலவர் கைப்பற்றலை அகற்றவும் போராடுவது.

3. தமிழ் மருத்துவம், கலை, இலக்கிய, பண்பாட்டுச் சிறப்புகளையும், வரலாற்றுச் சிறப்புகளையும் மீட்கப் போராடுவது.

4. தமிழகத்தின் நீர், நிலம், காடு, கடல், கனி மற்றும் வேளாண் வளங்களைப் பாதுகாக்கவும் அவற்றை நச்சுப்படுத்தும், கொள்ளையடிக்கும் தரகு முதலாளிய- பார்ப்பனிய வல்லரசியர்கள் மற்றும் மேலை வல்லரசுகளின் திட்டங்களை எதிர்த்தும் போராடுவது.

5. தமிழகத்தில் புது வன்குடித் தரகுப் பொருளியலைக் கட்டமைக்கும் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்கள் மற்றும் மேலை வல்லரசுகளின் ஒவ்வொரு நடவடிக்கையை எதிர்த்தும் அவர்களுடைய கொள்ளை, சுரண்டலை எதிர்த்தும் போராடுவது.

6. வல்லரசிய, தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்களின் பண்பாட்டுப் படையெடுப்பையும் பண்பாட்டுச் சீரழிவையும் அதற்கான நிறுவன முறைகளையும் எதிர்த்துப் போராடுவது. மொழி, குமுக பண்பாட்டுத் துறைகளில் சமக்கிருதமயமாக்கல் மற்றும் ஆங்கிலமயமாக்கலுக்கு எதிராகவும் அவற்றிலிருந்து தமிழுக்கு மீட்பதற்காகவும் போராடுவது.

7. காப்பு வரி, வணிக பொது ஒப்பந்தம் உட்பட தேசத்தை மேலை-வல்லரசியர்களுக்கு அடிமைப்படுத்துகின்ற மேலை வல்லரசுகளுடனான இந்திய அரசின் அனைத்து ஒப்பந்தங்களையும் செயலிழக்கச் செய்வதற்காகப் போராடுவது.

8. இந்திய வல்லாண்மை அரசு, அதன் எடுபிடி 'மாநில அரசு' ஆகியவற்றின் மக்கள் பகை, தேசப் பகை, கொடுநெறி கருப்புச் சட்டங்கள், அவற்றின் ஊழல் முறைகேடுகள், அதிகார வகுப்பு எல்லை மீறல்கள் ஆகியவற்றை எதிர்த்தும்; மக்களின் குடிநாயக, மாந்த உரிமைகள், நலன்கள் ஆகியவற்றைப் பாதுக்காக்கவும் போராடுவது.

9. தாழ்த்தப்பட்டோர், பெண்கள் ஆகியோர் மீதான ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலுக்கு எதிராகவும், அவர்களுடைய சம உரிமைக்காகவும் போராடுவது.

10. முதியவர்கள், குழந்தைகள், புலம் பெயர்ந்து வந்தோர் பாதுகாப்புக்கும், உரிமைக்கும்; அயலக, புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நலனுக்கும் போராடுவது.

படிப்பகம்

www.padippkam.com



11. தொழிலாளர், உழவர் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களின் வாழ்நிலை உயர்வுக்காகவும் அவர்களின் மீதான ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலுக்கு எதிராகவும் போராடுவது.

12. தரகு முதலாளிய–பார்ப்பனிய கல்வி முறையை ஒழிக்கவும், தேசிய அறிவியல் கல்வியை நிறுவவும், கல்வி நிறுவனங்களின் குடிநாயக முறைகளுக்காவும், முழுமையாக எழுத்தறிவின்மையை அகற்றுவதற்காகவும் போராடுவது.

13. மத, மொழி சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்படவும், அவர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடுவது.

14. மீனவர், பழங்குடி மக்கள், நெசவுத் தொழிலாளிகள் உள்ளிட்ட அனைத்து தொழில்வினைஞர்களின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் போராடுவது.

15. ஈழம் உள்ளிட்ட அனைத்து தேசிய விடுதலை இயக்கங்களுக்கும், புரட்சி இயக்கங்களுக்கும், குடிநாயக இயக்கங்களுக்கும் ஆதரவாகவும் வல்லரசிய, மேலாண்மை ஆற்றல்களுக்கு எதிராகவும் போராடுவது.

16. இந்திய தரகு முதலாளிய–பார்ப்பனிய வல்லரசியம் மற்றும் மேலை வல்லரசியங்களுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியா முழுவதுமுள்ள போராடும் குடிநாயக, தேசிய விடுதலை ஆற்றல்கள், அமைப்புகளுடன் இடைவிடாத உறவையும், ஒருமைப்பாட்டையும் பேணுவது.

17. தமிழகத்தின் எல்லைகளைப் பாதுகாக்கவும், மீட்கவும் போராடுவது.

18. தன்னாட்சி, தற்சார்பு, குடிநாயகத் தமிழகம் அமைப்பதற்கான எல்லாவகைக் கோரிக்கைகளுக்கும் ஆதரவாகப் போராடுவது.

இவை இன்றைய பொதுவான உடனடி தேசியக் கோரிக்கைகள் ஆகும். இவற்றின் அடிப்படையில் குறிப்பான கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து இயக்கங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். கொள்கைப்பரப்பு, கிளர்ச்சி, அம்பலப்படுத்தும் இயக்கங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். இத்தகைய இயக்கங்களை கட்சி தனது அமைப்புகளின் தலைமையிலும், தேசிய விடுதலையை ஏற்கும் அமைப்புகளின் ஒற்றுமை முன்னணியைக் கட்டி அதன் வாயிலாகவும் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய இயக்கங்களை நடத்தும் போது குட்டி முதலாளிய, முதலாளிய குடிநாயக ஆற்றல்களுடன் இயலுகின்ற அளவுக்கு கூட்டு நடவடிக்கைகள் மற்றும் கூட்டு முன்னணிகளுக்கு உள்ள வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் 'தன்னுரிமை' 'தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை' 'தூயதமிழ்' 'பெண் விடுதலை' 'சுற்றுச் சூழல் பாதுகாப்பு' 'குமுகஞாயம்' 'பார்ப்பனிய எதிர்ப்பு' 'தன்மானம்' 'தன்மதிப்பு' முதலான கோரிக்கைகளுடன் இயங்கும் அமைப்புகளையும் இ.பொக.(மா-லெ) அமைப்புகளையும், பா.ம.க., தி.மு.க., தி.க., ஜனதாதளம் போன்ற அனைத்துக் கட்சிகளிலும் கட்சி சார்பற்ற வகையிலும் உள்ள குடிநாயக, தேசிய ஆற்றல்களையும் இயலுகின்ற அளவுக்கு இத்தகைய இயக்கங்களில் ஒன்றிணைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறுதான் வலிமை வாய்ந்த ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டமைக்க முடியும். இத்தகைய வலிமையான தேசிய இயக்கத்தை கட்டமைப்பதுதான் இன்றைய செயலுத்திக் கட்டத்திற்கான வேலைத்திட்டமாகும்.



## மக்கள் திரள் அமைப்புகள் - இயக்கங்கள்

அரசியல் அணிதிரட்டலை முழுமையாக நிறைவேற்றுவதற்கு அல்லது ஒரு வலிமையான தேசிய இயக்கத்தை கட்டமைப்பதற்குத் தொழிலாளர், உழவர் கூட்டணி அடிப்படையானதாகும். எனவே, தொழிலாளர் - உழவர்களிடையே மக்கள் திரள் அமைப்புகளைக் கட்டுவதை கட்சி முதன்மையான பணியாக மேற்கொள்ள வேண்டும். கூடவே மாணவர், இளைஞர், மகளிர், தாழ்த்தப்பட்ட (பழந்தமிழ்) மக்களுக்கான மக்கள்திரள் அமைப்புகளையும் கட்ட வேண்டும். பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் கட்டும் இத்தகைய மக்கள் திரள் அமைப்புகள் முதலாவதாக ஒருவகை ஒற்றுமை முன்னணியாகவும், இரண்டாவதாக ஒருவகை அரசியல் பயிற்சித் தளமாகவும் இருக்கும். இத்தகைய மக்கள்திரள் அமைப்புகளில் குமுகாயத்தில் மிக முன்னேறிய பிரிவினரும் மிகப் பின்தங்கிய பிரிவினரும் இணைவதால் அவை ஒருவகை ஒற்றுமை முன்னணிகளாகும். இத்தகைய அமைப்புகள் வாழ்வின் அன்றாட ஒடுக்குமுறை, சுரண்டலுக்கு எதிராக மக்கள் வாழ்நிலையைப் பாதுகாக்கப் போராடக் கூடியவை என்பதால் இவற்றில் மிகப் பின்தங்கிய, அரசியல் குமுகாய உணர்வு குன்றிய எளிய மக்கள் பிரிவினரும்கூட இணைகிறார்கள். அதே நேரத்தில் முன்னேறிய பிரிவினரான பொதுவுடைமைப் புரட்சியாளர்களும் இந்த அமைப்புகளில் இணைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மக்கள் திரள் அமைப்புகளின் பின்தங்கிய மக்கள் திரளினரிடையே தெளிவுணர்வுடன் அரசியல் பரப்புரைகளை முன்னெடுத்துச் சென்று அரசியல் நடவடிக்கைகளுக்கு அவர்களை அணியப்படுத்தும் பணியை மேற்கொள்கிறார்கள். இதனால் இத்தகைய மக்கள் திரள் அமைப்புகள் அரசியல் பயிற்சித் தளங்களாகவும் இருக்கின்றன. இதற்காக, அவர்கள் மக்கள் திரள் அமைப்புகளின் மக்கள் பிரிவினரிடம் அரசியல் வகுப்புகள்

படிப்பகம்

www.padippkam.com



நடத்துவது. கட்சி வெளியீடுகள், செய்தித்தாள்கள், பிற வெளியீடுகள் வழங்குவது; அரசியல் இயக்கங்களில் பங்கேற்பதற்கான அறைகூவல்களை விடுப்பது என்று பல்வேறு வடிவங்களில் செயல்படுகின்றார்கள். கட்சி ஊழியர்கள் இந்த மக்கள் திரள் அமைப்புகள் மூலம் மக்கள் பிரிவினரின் அன்றாட நலன்களுக்கான போராட்டங்களுக்கும் தலைமையளிப்பதால் இத்தகைய மக்கள் திரள் அமைப்புகள் மக்கள் பிரிவுகளைத் தத்தம் அன்றாட நலன்களுக்கான போராட்டங்களுக்கே கட்சித் தலைமையில் அணிதிரட்டிவிடுகின்றன என்பதுடன் அரசியல் பயிற்சி அளிப்பதற்கு நெருக்கமாகவும் அவர்களைக் கொண்டு வந்துவிடுகின்றன. அரசியல் பயிற்சி அளிப்பதற்கு மார்க்சிய-லெனினிய மெய்மம், கட்சித் திட்டம், கட்சியின் மூலவுத்தி-செயலுத்தி முழக்கம் ஆகியவற்றிலிருந்து கட்சியின் உடனடி தேசியக் கோரிக்கைகள் மற்றும் அன்றாட செயல்முறைகளுக்கான அரசியல் முழக்கங்கள் நடவடிக்கைகள் வரை கட்சி ஊழியர்களுக்கு வழிகாட்டுகின்றவையாக இருக்கின்றன. இவை தவிர அரசியல் அணிதிரட்டலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தேசியக் கல்வி, அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான அமைப்பும், தேசியக் கலை-இலக்கிய, பண்பாட்டுக்கான அமைப்பும் கட்டப்பட வேண்டும். இவ்வமைப்புகள் அவ்வத்துறை சார்ந்த தேசிய, குடிநாயக அறிவாளர்கள் ஒன்றுபட்டு வல்லரசியம் மற்றும் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்திற்கு எதிராகவும் தமிழ் தேசிய நலனுக்கு ஆதரவாகவும் அவ்வத்துறை பணிகளை ஒருங்கிணைக்க இன்றியமையாதவையாகும்.

கட்சியால் கட்டப்படும் மக்கள் திரள் அமைப்புகள் கட்சியின் அரசியல், கொள்கையியல் நிலைப்பாடுகளின்பால் உறுதியும், தெளிவும், தெளிவுபடுத்தும் ஆற்றலும் கொண்ட கட்சி ஊழியர்களின் தலைமையில் அமைய வேண்டும். அத்தலைமை ஊழியர்களுக்கு அந்தந்த மக்கட் பிரிவினரின் அன்றாட நலன்கள், மூலவுத்தி நலன்கள் குறித்த தெளிவும், அவர்களுடைய உடனடிக் கோரிக்கைகளைத் தொகுத்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் குறிப்பான சிக்கல்களின்பால் இயக்கங்களைக் கட்டமைக்கும் ஆற்றலும் இருக்க வேண்டும்.

## கட்சி அமைப்புகளைக் கட்டுவதும் தலைமையளிப்பதும்

கட்சி என்பது புரட்சிக்குத் தலைமையளிக்கும் பாட்டாளி வகுப்புத் தலைமை அமைப்பாகும். அது மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை மெய்ம வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு குடிநாயக நடுவக்



கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுகின்றது. மேலும் கட்சித்திட்டம் மூலவுத்தி, செயலுத்தி ஆகியவற்றை வகுத்துக்கொண்டு மக்கள் நடுவில் செயல்படுகிறது. மக்கள் நடுவிலான தனது செயல்பாடுகளினூடே அரசியல் குமுக உணர்வு கொண்ட முன்னணிப் பிரிவினரைக் கண்டறிந்து தனது திட்டமிட்ட தெளிவுணர்வு முயற்சிகள் மூலம் அவர்களிலிருந்து கட்சி ஊழியர்களை உருவாக்கி, கட்சி அமைப்புகளை இடைவிடாது விரிவுபடுத்துகிறது. இத்தகைய விரிவுபடுத்தல் இன்றி மக்கள் நடுவிலான கட்சிப் பணிகள் விரிவுபடுவது இயலாது என்பதை அது உணர்ந்திருக்கிறது.

கொள்கையியல் போராட்டத்தின் மூலமே கட்சி கட்டப்படுகிறது. தவறான கொள்கையியல் போக்குகளுக்கு எதிரான போராட்டத்திலேயே கட்சித் திட்டம் மூலவுத்தி, செயலுத்தி ஆகியன வகுக்கப்படுகின்றன. மேலும் மூலவுத்தி, செயலுத்திகளின் அடிப்படையிலான மக்கள் நடுவிலான செயல்பாடுகளின் வெற்றிக்கும் தவறான கொள்கையியல் போக்குகளுக்கு எதிரான போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இதன் மூலமே மக்களின் முன்னணிப் பிரிவினரிடமிருந்து ஊழியர்களை வென்றெடுத்து கட்சி அமைப்பையும் தொடர்ந்து விரிவுபடுத்த இயலும். கட்சி தொடர்ந்து கொள்கையியல் அரங்கிலான பணிக்கு அழுத்தம் கொடுப்பதும் கட்சி ஊழியர்களை வென்றெடுத்து அமைப்பாக்குவதற்கான செயல் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்வதும் இதற்கு இன்றியமையாததாகும்.

உடனடி தேசியக் கோரிக்கைகளின் அடிப்படையில் பல்வேறு அரசியல் இயக்கங்களைக் கட்டமைத்து அவற்றோடு இணைத்து *புரட்சித் தேசிய அரசு* மற்றும் *தேசிய விடுதலைப் புரட்சி* குறித்த விழிப்புணர்வை மக்கள் நடுவில் ஏற்படுத்துவதற்கு கட்சி ஒவ்வொரு கட்டத்திலும் குறிப்பான அரசியல் முழக்கங்களையும் போராட்ட, இயக்க முறைகளையும் வகுத்து வழிநடத்த வேண்டும். தேசிய விடுதலையை ஏற்கும் அமைப்புகளுடன் ஓர் ஒற்றுமை முன்னணியைக் கட்டி செயல்படுவதும் குட்டி முதலாளிய, முதலாளிய குடிநாயக தேசிய ஆற்றல்களுடன் ஓர் இணக்கமான அணுகுமுறையுடன் இயலுகின்ற கூட்டு நடவடிக்கைகள், கூட்டு முன்னணிகள் அமைப்பதற்கான வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொள்வதும் இதற்கு துணை செய்யும்.

மூலவுத்தி அடிப்படையில் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய அரசியல் ஆற்றல்கள் முற்றாக தாக்கி அழிக்கப்பட வேண்டியவையும்; முதலாளிய, குட்டி முதலாளிய அரசியல் ஆற்றல்கள் வென்றெடுக்கப்பட வேண்டியவையும் ஆகும். இவற்றை அரசியல் அணிதிரட்டலுக்கான இந்தச் செயலுத்திக் காலத்தில் எப்படி நிறைவேற்றுவது? மூலவுத்தி அடிப்படையில்

படிப்பகம்

www.padippkam.com



தாக்கி அழிக்கப்பட வேண்டிய எதிரி வகுப்பு அரசியல் ஆற்றல்களை அவற்றின் ஒவ்வொரு நடவடிக்கையிலும்-அரசியல் வகையிலும் கொள்கையியல் அடிப்படையிலும்- முற்றாக அம்பலப்படுத்தவேண்டும். குட்டி முதலாளிய, முதலாளிய அரசியல் ஆற்றல்களைப் பொறுத்தவரை அவற்றின் சரியான தேசிய, குடிநாயக கோரிக்கைகளின்பால் ஓர் இணக்கமான, இயலுமான கூட்டு நடவடிக்கைகளுக்கான அணுகுமுறையை மேற்கொள்ளும் அதே நேரத்தில் தவறான அரசியல் கொள்கையியல் நிலைப்பாடுகளின்பால் விட்டுக் கொடுக்காத போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு குட்டி முதலாளிய, முதலாளிய குடிநாயக ஆற்றல்களைச் செயலுத்தி மற்றும் மூலவுத்தி வகையில் புரட்சிக்கு வென்றெடுத்து அவற்றின் அரசியல் கொள்கையியல் போக்குகளை வலுவிழக்கச் செய்யவேண்டும். இவ்வாறுதான் அரசியல் அணிதிரட்டலுக்கான இந்தச் செயலுத்திக் காலத்தில் கட்சியின் நடத்தை அமையும்.

கட்சியின் பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளும் கட்சியின் அரசியல் அணிதிரட்டல் வேலைத் திட்டத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டும். கட்சி எப்போதும் அவற்றிற்கான தலைமை ஊழியர்கள், மூலவுத்தி, செயலுத்தி கொள்கை முழக்கங்கள், உடனடி கோரிக்கைகள் மற்றும் அமைப்பு, இயக்க முறைகள், வடிவங்கள் குறித்த தெளிவுணர்வுடன் இருக்க வேண்டும்.

கட்சி புரட்சியின் தேவைகளுக்கு ஏற்ப கமுக்க, வெளிப்படையான அமைப்பு, இயக்க முறைகளைக் கையாளுகிறது. அவ்வாறு கையாளும் கட்சியே புரட்சி இயக்கத்தைத் தொய்வின்றி முன்னெடுத்துச் செல்ல முடியும். ஒரு புரட்சிக் கட்சி தேவைக்கேற்ப கமுக்க அல்லது வெளிப்படையான முறைகளுக்கு மாறிக் கொள்ளும் ஆற்றல் படைத்த கட்சியாகும். அத்தகைய கட்சியையே நாம் கட்ட வேண்டும்.

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி
நடுவ அமைப்புக் குழு
மே 1994

★

படிப்பகம்